©
தமிழ்நாடு அரசு
2012

[Regd. No. TN/CCN/467/2012-14.
[R. Dis. No. 197/2009.
[விலை : ரூ. 1.60 காசு

# தமிழ்நாடு அரசிதழ்

ஆணையின்படி வெளியிடப்பட்டது.

எண் 4] சென்னை, புதன்கிழமை, பிப்ரவரி 1, 2012
தை 18, திருவள்ளுவர் ஆண்டு–2043

## பகுதி II—பிரிவு 2 இன் இணைப்பு

## அரசாங்க அறிவிப்புகளின் தமிழ் மொழிபெயர்ப்புகள்

---

### தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறை

**அறிவிக்கைகள்**

*[அரசாணை (2டி) எண் 39, தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்பு (J1)த் துறை, நாள்: 15 செப்டம்பர் 2011.]*

1948ஆம் ஆண்டு குறைந்தளவு ஊதியங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 11/1948) 3ஆம் பிரிவைச் சேர்ந்த (1) உட்பிரிவின் (b) பகுதி மற்றும், 5 ஆம் பிரிவைச் சேர்ந்த (2) உட்பிரிவிலும் வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களைக் கொண்டும், தொழிலாளர் நலன் வேலைவாய்ப்புத் துறையில் உருவாகி 19–10–2005ஆம் நாளிட்ட ***தமிழ்நாடு அரசிதழின்*** பாகம் II—பிரிவு 2–ல் 432 ஆம் பக்கத்தில் (ஆங்கிலத்தில்) வெளியிடப்பட்ட II(2)/தொ.வே.வா/797/2005 ஆம் எண்ணுள்ள அறிவிக்கையை ரத்து செய்து அதற்குப் பதிலாகவும், தமிழ்நாடு ஆளுநர் அவர்கள் இரசாயன உரத் தொழிற்சாலையில் பணியமர்த்தப்பட்டுள்ள, கீழ்க்காணும் விவர அட்டவணையின் (1) நெடும்பத்தியில் குறிப்பிடப்பட்டுள்ள வகைகளைச் சேர்ந்த பணியாளர்களைப் பொறுத்தமட்டில் வழங்கத்தக்க குறைந்தளவு ஊதிய வீதங்களை அதே விவர அட்டவணையின் (2) ஆம் நெடும்பத்தியின் நிகரான பதிவுகளில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு இதனால் திருத்தி அமைக்கிறார். இது மேற்சொன்ன சட்டத்தின் 5 ஆம் பிரிவைச் சேர்ந்த (1)ஆம் உட்பிரிவின் (b) பகுதியில் சொல்லியுள்ளவாறு ஏற்கனவே வெளியிடப்பட்டுள்ளது.

2. இந்த அறிவிக்கை *தமிழ்நாடு அரசிதழில்* வெளியிடப்படும் நாளன்றும் அந்நாள் முதற்கொண்டும் செயலுக்கு வரும்.

**விவர அட்டவணை**

**இரசாயன உரத் தொழிற்சாலையில் வேலைவாய்ப்பு**

| *பணியாளர்களின் வகைகள்* | *குறைந்தளவு ஊதிய வீதங்கள் (மாதம் ஒன்றுக்கு)* |
|---|---|
| *(1)* | *(2)* |
| | *ரூ. காசு.* |
| 1. **நிருவாகப் பணியாளர்கள்:** | |
| (1) மேலாளர் | 3936.00 |
| (2) எழுத்தர்/தட்டச்சர்/கணக்கர் | 3011.00 |
| (3) ஓட்டுநர்/பண்டகக் காப்பாளர் | 2878.00 |
| (4) அலுவலக உதவியாளர் (Office boy) | 2614.00 |
| 2. **தொழிலாளர்கள் வகை:** | |
| (1) உயரளவு பயிற்சிபெற்ற தொழில்நுட்ப மேற்பார்வையாளர்/வேதியியாலாளர் | 3605.00 |
| (2) பயிற்சிபெற்ற இயக்குநர்/தொழில்நுட்பப் பணியாளர் (Technician) மின்பணியாளர்/பொருத்துநர் | 3143.00 |
| (3) பயிற்சிபெறாத பொதுவான தொழிலாளர்/ உதவியாளர்/நிரப்புனர்/பாதுகாவலர்/காவலாள் | 2877.00 |

***விளக்கங்கள்:—*(1)** அகவிலைப்படி.— மேற்சொன்ன அடிப்படை ஊதியங்களுடன் அகவிலைப்படி கீழே குறிப்பிடப்பட்டவாறு பணியாளர்களுக்கு வழங்கப்பட வேண்டும்.

(i) அகவிலைப்படியானது, 2000 ஆம் ஆண்டிற்கான சென்னை மாநகருக்கான நுகர்வோர் சராசரி விலைகுறியீட்டு எண்ணுடன் (அதாவது, 2000ஆம் ஆண்டில் 100 புள்ளிகள் என்பதை அடிப்படையாகக் கொண்டு கணக்கிடப்பட்ட 475 புள்ளிகள்) இணைக்கப்பட்டுள்ளது. 475 புள்ளிகளுக்கு மேல் உயரும் ஒவ்வொரு புள்ளிக்கும், திங்களொன்றுக்கு ரூ. 6.00 (ரூபாய் ஆறு மட்டும்) என்ற வீதத்தில் மாறுபடும் அகவிலைப்படி வழங்க வேண்டும்.

(ii) அகவிலைப்படியானது, ஜனவரி முதல் டிசம்பர் வரையிலான முந்தைய 12 மாதங்களுக்கான விலைப் புள்ளியின் சராசரியை அடிப்படையாகக் கொண்டு ஒவ்வோராண்டும் ஏப்ரல் திங்கள் முதல் நாளிலிருந்து கணக்கிடப்பட வேண்டும்.

(iii) முந்தைய ஆண்டில் சென்னை மாநகருக்கான நுகர்வோர் விலைக்குறியீட்டு சராசரி எண்ணினை அடிப்படையாகக் கொண்டு, இந்த அறிவிக்கை ***தமிழ்நாடு அரசிதழில்*** வெளியிடப்படும் நாளிலிருந்து அகவிலைப்படியின் முதல் கணக்கீடு செயலுக்கு வரும்.

(2) நாள் ஊதியத்தை கணக்கிட மாத ஊதியத்தை 26 ஆல் பெருக்க வேண்டும்.

(3) ஒரே தன்மை கொண்ட பணியைச் செய்யும்போது, ஊதியம் வழங்குவதில் ஆண், பெண் தொழிலாளர்களுக்கிடையே பாகுபாடு காட்டக்கூடாது.

(4) இங்கு நிர்ணயிக்கப்பட்டுள்ள குறைந்தளவு ஊதிய வீதங்களைக் காட்டிலும் தற்போதுள்ள ஊதிய விகிதங்கள் அதிகமாக இருக்கும் இடங்களிலெல்லாம் அதே ஊதியங்கள் தொடர்ந்து வழங்கப்பட வேண்டும்.

**விஸ்வநாத் A. ஷெகோன்கர்,**
*அரசு முதன்மைச் செயலாளர்.*

(தமிழாக்கம்)

**ந. அருள்,**
*இயக்குநர்,*
*தமிழ் வளர்ச்சி, அறநிலையங்கள் மற்றும்*
*செய்தி (மொழிபெயர்ப்பு)த் துறை.*

*அரசாணை (நிலை) எண் 62, தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்பு (H1)த் துறை, நாள்: 1 ஆகஸ்ட் 2011*

**1965ஆம் ஆண்டு ஊதியக் கொடை வழங்கும் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 21/1965) 27ஆம் பிரிவைச் சேர்ந்த (1) உட்பிரிவின் கீழும் தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறையில் உருவாகி 16–3–2005 ஆம் நாளிட்ட *தமிழ்நாடு அரசிதழின்* பாகம்–II பிரிவு–2–ல் 120 மற்றும் 121 ஆம் பக்கங்களில் (ஆங்கிலத்தில்) வெளியிடப்பட்ட II(2) தொ.வே. வா/173/2005 ஆம் எண்ணுள்ள அறிவிக்கையை ரத்து செய்து அதற்குப் பதிலாகவும், தமிழ்நாடு ஆளுநர் அவர்கள், கீழேயுள்ள விவர அட்டவணையின் நெடும்பத்தி (2)இல் குறிப்பிடப்பட்ட நபர்கள் அந்த அட்டவணையின் (3) நெடும்பத்தியின் நிகரான பதிவுகளில் குறிப்பிடப்பட்ட உள்ளூர் பகுதிகளுக்குள் (Local limits) தங்களுடைய அதிகார வரம்பை செலுத்துவதற்கான ஆய்வாளர்களாக இதனால் நியமிக்கிறார்.**

**விவர அட்டவணை**

| *தொ* | *நபர்கள்* | *உள்ளூர் பகுதிகள் எண்* |
|---|---|---|
| *(1)* | *(2)* | *(3)* |
| 1. | தொழிலாளர் நல ஆணையர் | தமிழ்நாடு மாநிலம் முழுவதும் |
| 2. | தொழிலாளர் நல இணை ஆணையாளர்கள், (இணக்கம் செய்தல்) | |
| 3. | தொழிலாளர் நல இணை ஆணையாளர், (நிருவாகம்) | |
| 4. | தொழிலாளர் நல சிறப்பு துணை ஆணையாளர் | |
| 5. | தொழிலாளர் நல உதவி ஆணையாளர், (தலைமையிடம்) சென்னை. | |
| 6. | தொழிலாளர் நல இணை ஆணையாளர், சென்னை. | சென்னை, வேலூர், திருவண்ணாமலை, காஞ்சிபுரம், திருவள்ளூர், கடலூர் மற்றும் விழுப்புரம் மாவட்டங்கள். |
| 7. | தொழிலாளர் நல இணை ஆணையாளர், திருச்சிராப்பள்ளி. | திருச்சிராப்பள்ளி, தஞ்சாவூர், திருவாரூர், நாகப்பட்டினம், அரியலூர், பெரம்பலூர், புதுக்கோட்டை, திண்டுக்கல், தேனி மற்றும் கரூர் மாவட்டங்கள். |
| 8. | தொழிலாளர் நல இணை ஆணையாளர், மதுரை. | மதுரை, சிவகங்கை, இராமநாதபுரம், விருதுநகர், தூத்துக்குடி, திருநெல்வேலி மற்றும் கன்னியாகுமரி மாவட்டங்கள். |
| 9. | தொழிலாளர் நல இணை ஆணையாளர், கோயம்புத்தூர். | கோயம்புத்தூர், திருப்பூர், நீலகிரி, சேலம், ஈரோடு, நாமக்கல், தருமபுரி மற்றும் கிருஷ்ணகிரி மாவட்டங்கள். |
| 10. | தொழிலாளர் நல துணை ஆணையாளர்–I, சென்னை. | சென்னை, வேலூர் மற்றும் திருவண்ணாமலை மாவட்டங்கள். |
| 11. | தொழிலாளர் நல துணை ஆணையாளர்–II, சென்னை. | காஞ்சிபுரம், திருவள்ளூர், கடலூர் மற்றும் விழுப்புரம் மாவட்டங்கள். |
| 12. | தொழிலாளர் நல துணை ஆணையாளர், திருச்சிராப்பள்ளி. | திருச்சிராப்பள்ளி, தஞ்சாவூர், திருவாரூர், நாகப்பட்டினம், அரியலூர், பெரம்பலூர் மற்றும் புதுக்கோட்டை மாவட்டங்கள். |
| 13. | தொழிலாளர் நல துணை ஆணையாளர், திண்டுக்கல். | திண்டுக்கல், தேனி மற்றும் கரூர் மாவட்டங்கள். |
| 14. | தொழிலாளர் நல துணை ஆணையாளர், மதுரை. | மதுரை, சிவகங்கை, இராமநாதபுரம், மற்றும் விருதுநகர் மாவட்டங்கள். |
| 15. | தொழிலாளர் நல துணை ஆணையாளர், திருநெல்வேலி. | தூத்துக்குடி, திருநெல்வேலி மற்றும் கன்னியாகுமரி மாவட்டங்கள். |
| 16. | தொழிலாளர் நல துணை ஆணையாளர், கோயம்புத்தூர். | கோயம்புத்தூர், திருப்பூர் மாவட்டங்கள். |
| 17. | தொழிலாளர் நல துணை ஆணையாளர், சேலம். | சேலம், ஈரோடு, நாமக்கல், மற்றும் தருமபுரி மாவட்டங்கள். |
| 18. | தொழிலாளர் நல துணை ஆணையாளர், குன்னூர். | நீலகிரி மாவட்டம். |
| 19. | தொழிலாளர் நல உதவி ஆணையாளர், தொழிலாளர் நல துணை ஆணையாளர் அலுவலகம்–I, சென்னை. | சென்னை, வேலூர், திருவண்ணாமலை மாவட்டங்கள். |

| *தொ* | *நபர்கள்* | *உள்ளூர் பகுதிகள் எண்* |
|---|---|---|
| *(1)* | *(2)* | *(3)* |
| 20. | தொழிலாளர் நல உதவி ஆணையாளர், தொழிலாளர் நல துணை ஆணையாளர் அலுவலகம்–I, சென்னை. | காஞ்சிபுரம், திருவள்ளூர், கடலூர், மற்றும் விழுப்புரம் மாவட்டங்கள். |
| 21. | தொழிலாளர் நல உதவி ஆணையாளர், தொழிலாளர் நல துணை ஆணையாளர் அலுவலகம், திருச்சிராப்பள்ளி. | திருச்சிராப்பள்ளி, தஞ்சாவூர். நாகப்பட்டினம், பெரம்பலூர் மற்றும் புதுக்கோட்டை மாவட்டங்கள். |
| 22. | தொழிலாளர் நல உதவி ஆணையாளர், தொழிலாளர் நல துணை ஆணையாளர் அலுவலகம், திண்டுக்கல். | திண்டுக்கல், தேனீ, கரூர், மாவட்டங்கள் |
| 23. | தொழிலாளர் நல உதவி ஆணையாளர், தொழிலாளர் நல துணை ஆணையாளர் அலுவலகம், மதுரை. | மதுரை, சிவகங்கை இராமநாதபுரம், விருதுநகர் மாவட்டங்கள். |
| 24. | தொழிலாளர் நல உதவி ஆணையாளர், தொழிலாளர் நல துணை ஆணையாளர் அலுவலகம், திருநெல்வேலி. | தூத்துக்குடி, திருநெல்வேலி, கன்னியாகுமரி, மாவட்டங்கள். |
| 25. | தொழிலாளர் நல உதவி ஆணையாளர், தொழிலாளர் நல துணை ஆணையாளர் அலுவலகம், கோயம்புத்தூர் | கோயம்புத்தூர், திருப்பூர், மாவட்டங்கள். |
| 26. | தொழிலாளர் நல உதவி ஆணையாளர், தொழிலாளர் நல துணை ஆணையாளர் அலுவலகம், சேலம், | சேலம், நாமக்கல், ஈரோடு, தருமபுரி மற்றும் கிருஷ்ணகிரி மாவட்டங்கள். |
| 27. | தொழிலாளர் நல உதவி ஆணையாளர், தொழிலாளர் நல துணை ஆணையாளர் அலுவலகம், குன்னூர். | நீலகிரி மாவட்டம். |
| 28. | தொழிலாளர் நல உதவி ஆணையாளர், (இணக்கம் செய்தல்–I), ஸ்ரீபெரும்புதூர். | |
| 29. | தொழிலாளர் நல உதவி ஆணையாளர், (இணக்கம் செய்தல்–II) சென்னை | |
| 30. | தொழிலாளர் நல உதவி ஆணையாளர், (இணக்கம் செய்தல்), திருச்சிராப்பள்ளி. | 1947 ஆம் ஆண்டு தொழிற்சாலை தகராறுகள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 14/1947) 22 ஆம் பிரிவைச் சேர்ந்த (3) உட்பிரிவின் கீழ் அவர்களுக்கு ஒப்படைக்கப்பட்ட பகுதிகள். |
| 31. | தொழிலாளர் நல உதவி ஆணையாளர், (இணக்கம் செய்தல்–I), கோயம்புத்தூர் | |
| 32. | தொழிலாளர் நல உதவி ஆணையாளர், (இணக்கம் செய்தல்–II), கோயம்புத்தூர். | |
| 33. | தொழிலாளர் நல உதவி ஆணையாளர், (இணக்கம் செய்தல்–III), கோயம்புத்தூர். | |
| 34. | தொழிலாளர் நல உதவி ஆணையாளர், (இணக்கம் செய்தல்–III), கோயம்புத்தூர். | |
| 35. | தொழிலாளர் நல அலுவலர்கள். | |
| 36. | மேம்பாட்டு ஆணையாளர்/மேம்பாட்டு இணை ஆணையாளர்கள், தமிழ்நாடு சிறப்பு பொருளாதார மண்டலங்கள் | சம்பந்தப்பட்ட சிறப்பு பொருளாதார மண்டலம். |

**விஷ்வநாத் A. ஷெகோன்கர்,**
*அரசு முதன்மைச் செயலாளர்.*

(தமிழாக்கம்)

**ந. அருள்,**
*இயக்குநர்.*
*தமிழ் வளர்ச்சி அறநிலையங்கள்*
*மற்றும் செய்தி (மொழிபெயர்ப்பு)த் துறை.*

தமிழ்நாடு அரசுக்காக சென்னை எழுதுபொருள் மற்றும் அச்சுத் துறை இயக்குநரால்
அச்சிடப்பட்டு வெளியிடப்பட்டது.